சிவ சிவ
தென்னாடுடைய சிவனே போற்றி !

உ
சிவமயம்

சிவ சிவ
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி !!

## நாகை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கீழப்பெரும்பள்ளம், நாகநாதன்கோயில் (மூங்கில்தோப்பு) கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்தரும் சௌந்தரநாயகி உடனுறை நாகநாத சுவாமி திருக்கோயில் கேது பரிகாரஸ்தலம்

website: www.kethutemple.org - g-mail: kethutemple@gmail.com - Ph: 04364 260424

# ஸ்ரீ வாசுகி உற்சவ திருவிழா அழைப்பிதழ்

**நாள் : 30-03-2019 சனிக்கிழமை பங்குனி மாதம் 17-ஆம் நாள் திருவோண நட்சத்திரம்**

### ஸ்ரீ விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின்இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே



### கேது துதி

மாதுசேர் நெடுமால் முன்னால் மாதிரி வலமே போந்து
நீதியாய் நடுவகுத்து நிறைதளர் தந்தையைச் சீர்க்கும்
மாதுசேய் கதிரிவிழுங்கும் சிவன் கையில் சிரமேபெற்ற
கேதுவே உனைத் துதிப்பேன் கீர்த்தியாய் ரட்சிப்பாயே.

## தலவரலாறு சுருக்கம்

இறவாவரம் பெற தேவரும் அசுரரும் திருப்பாற்கடலில் மந்திரகிரி என்ற மலையை மத்தாகவும் வாசுகி எனும் நாகத்தை கயிறாகவும் கொண்டு அமிர்தம் பெற கடைந்த சமயத்தில் வாசுகி நாகம் வலி தாங்காமல் நஞ்சைக்கக்கியது. நஞ்சினை கண்டு அஞ்சிய அசுரர்களும் தேவர்களும் ஈசனிடம் முறையிட்டனர். சிவபெருமான் நஞ்சினை உட்கொண்டதால் தன் நஞ்சினை சிவபெருமான் உண்ணுமாறு ஆயிற்றே என உள்ளம் வருந்திய வாசுகி நாகம் ஈசன் அருள் பெற வேண்டி இத்தலத்தில் தவம் இருந்தது. வாசுகி நாகத்தின் தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் பங்குனி மாதம் திருவோணம் நட்சத்திர தினத்தன்று காட்சி தந்து அருளினார். சிவபெருமானிடம் வாசுகி நாகம் தன் பாவத்தைப் பொறுத்தருள வேண்டியதோடு, தான் தவஞ்செய்த மூங்கிற் காட்டில் கோயில் கொண்டு கேதுவாக எழுந்தருளியதுடன், இங்கு வந்து வழிபடுவோருக்கு கேது கிரக தோஷங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென வேண்டிக்கொண்டது அவ்வாறே சிவபெருமான் **நாகநாத சுவாமி** என்னும் திருநாமத்துடன் **சௌந்தரநாயகி அம்மையுடன்** இங்கு எழுந்தருளி அருள்பாலித்து வருகின்றார்.

இப்பெருமை வாய்ந்த இத்தலத்தில் நிகழும் விளம்பி வருடம் பங்குனி மாதம் 17-ம் நாள் **30 - 03 - 2019 சனிக்கிழமை** நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி வாசுகி உற்சவ விழா நடைபெறும். அதுசமயம் மெய்யன்பர்கள் அனைவரும் தாங்கள் செல்வச் சிறார்களுடன் விழாவில் கலந்துகொண்டு எல்லாம் வல்ல இறைவனின் திருவருளைப்பெற்று விழாவினை இனிதே சிறப்பிக்க வேண்டுமாறு அழைக்கின்றோம். மேலும் இவ்விழாவிற்கு நன்கொடைதாரர்களும் உபயதாரர்களும் வரவேற்கப்படுகிறார்கள்.

**பா.அன்பரசன்** B.B.A.,
செயல் அலுவலர்.

**தி. பாலு**
ஆய்வர்/செம்பை

**இ. ஜீவானந்தம்**, M.Sc., B.L.,
தக்கார்/துணை ஆணையர் (கூ.பொ)
இ.ச.அறநிலையத்துறை, மயிலாடுதுறை.

**திருக்கோயில் அர்ச்சகர்கள், பணியாளர்கள்** மற்றும் **கிராமவாசிகள்**

## நிகழ்ச்சி நிரல்

**நாள் : 30-03-2019 சனிக்கிழமை பங்குனி மாதம் 17-ஆம் நாள் திருவோண நட்சத்திரம்**

| | |
|---|---|
| காலை 08-00 மணி | மகா அபிஷேகம் |
| காலை 10-00 மணி | தயிர் பல்லயம் மற்றும் மகா தீப ஆராதனை |
| மதியம் 3-00 மணி | ஸ்ரீ கேதுபகவான் மூங்கில் வனத்திற்கு தவம் செல்லுதல் |
| மாலை 5-00 மணி | கேது பகவானுக்கு சௌந்தரநாயகி உடனுறை நாகநாதசுவாமி காட்சியளித்தல் |
| இரவு 7-00 மணி | பஞ்சமூர்த்திகள் மற்றும் கேதுபகவான் திருவீதிவுலா காட்சி |
| இரவு 9-00 மணி | அருட்பிரசாதம் மற்றும் அன்னபிரசாதம் வழங்குதல் |